**ஆகஸ்ட் – 17**

# தேசியச் செய்திகள்

## சப்த தாரா கட்டமைப்பு

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற சுதந்திர தின உரையின் போது பிரதமர் நரேந்திர மோடி சப்த தாரா (சக்தியின் சப்ததாரா) கட்டமைப்பை அறிமுகப் படுத்தினார்.
- இது தேசிய வளர்ச்சியின் ஏழு முக்கியப் பகுதிகளை உள்ளடக்கி, 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த பாரதம் (விக்சித் பாரத்) என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்தி, விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள், கதி சக்தி, பாதுகாப்பு சுயசார்பு, பசுமை மற்றும் நீலப் பொருளாதாரம் மற்றும் இந்தியாவின் மென்திறன் (soft power) ஆகியவை அந்த ஏழு பகுதிகளாகும்.
- தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் கீழ், அடுத்த ஓராண்டில் 1 கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவில் (AI) பயிற்சி அளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனை இலக்காக இந்தியா நிர்ணயித்துள்ளது, மேலும் அடுத்த 6 முதல் 7 ஆண்டுகளில் ஐந்து புதிய அணு உலைகள் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## நவீன குடிமைப் பாதுகாப்பு தொண்டர் படை

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று புது தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின உரையின் போது, "மிகப்பெரிய, நவீன" குடிமைப் பாதுகாப்பு தொண்டர் படையை பிரதமர் அறிவித்தார்.
- முன்மொழியப்பட்ட இந்தப் படையானது நவீனப் பாதுகாப்பு சவால்கள் மற்றும் அவசர காலச் சூழ்நிலைகளின் போது பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்தும்.

- இந்தியாவின் குடிமை (சிவில்) பாதுகாப்பு அமைப்பானது 1968 ஆம் ஆண்டின் சிவில் பாதுகாப்புச் சட்டம் மற்றும் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது.
- குடிமைப் பாதுகாப்பு தொண்டர்கள் அவசர காலங்களில் எச்சரிக்கை அமைப்புகள், வெளியேற்றம், மீட்பு, முதலுதவி, தீயணைப்பு மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புகளின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்றனர்.
- புதிய தொண்டர் படையானது நவீன பயிற்சி மற்றும் மேம்பட்ட அவசரகால-பதிலளிப்பு நெறிமுறைகளைப் பெறும்.
- ஊர்க்காவல் படையினர் (Home Guards) என்பது மாநிலக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு தொடர்புடைய துணைப் படையாகும், மேலும் இவர்கள் காவல்துறை, சிவில் நிர்வாகம் மற்றும் பேரிடர்-பதிலளிப்புக் குழுக்களுக்கு உதவுகின்றனர்.



August 2026, the Prime Minister announced a “massive, modern” Civil Defence volunteer force during India’s 80th Independence Day celebrations at the Red Fort in Delhi. The proposed force is intended for civilian protection during modern security challenges and emergency situations.


## 1 கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாடு

- ஓராண்டிற்குள் 1 கோடி (10 மில்லியன்) இந்திய இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (AI) திறன்களில் பயிற்சி அளிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று அறிவித்தார்.
- இந்த முன்னெடுப்பானது இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன்களை வழங்கி, வளர்ந்து வரும் தொழில்நுட்ப வாய்ப்புகளுக்கு அவர்களைத் தயார் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புது தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற 80-வது சுதந்திர தின உரையின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இது சப்த தாரா கட்டமைப்பின் கீழ் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் பரந்த கவனத்தை செலுத்துவதன் ஒரு பகுதியாகும்.
- பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் விரைவான விரிவாக்கத்தை அரசாங்கம் எடுத்துரைத்தது.

- இந்த முன்னெடுப்பானது இந்தியாவின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புச் சூழலை வலுப்படுத்துவதையும், உலகளாவிய செயற்கை நுண்ணறிவுப் பொருளாதாரத்தில் இளைஞர்கள் பங்கேற்க உதவுவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு: 40 கேள்விகள்



NEW IN CENSUS '27

- Place of Covid-19 vaccination
- No. of bank accounts
- Mobile number
- Aadhaar number
- Voter ID number
- Passport number
- Spouse's name
- Nationality
- Availability of driving licence
- Father's particulars
- Mother's particulars
- Permanent address
- *Caste
- *Digital literacy status
- *Details of no. of children surviving/ever born alive/born alive during last one year are sought only from women

(*Components added as extension to the existing questions in Census 2011)

**Centre notifies 40 questions for Census 2027; caste, SC, ST status included**

The Centre on Friday (August 14) notified 40 questions — caste, place of Covid vaccination being two of them — to be asked of respondents during the population enumeration phase of the Census, set to begin from September 1 in snow-bound areas, a government order said.

- சாதி, ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, வங்கிக் கணக்குகள் மற்றும் பிற விவரங்கள் உட்பட 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டத்திற்கான 40 கேள்விகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக, பட்டியலிடப்பட்ட சாதியினர் (SCs) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (STs) தவிர, அனைத்து சமூகத்தினருக்கும் சாதி பதிவு செய்யப்பட உள்ளது.

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் கேட்கப்பட்ட 29 கேள்விகளுடன் ஒப்பிடச் செய்கையில், இப்புதிய வினாப்பட்டியலில் 13 புதிய கேள்விகள் சேர்க்கப் பட்டு உள்ளன.
- பெற்றோரின் விவரங்கள், வாழ்க்கைத் துணையின் பெயர், தேசியம், டிஜிட்டல் கல்வியறிவு, நிரந்தர முகவரி மற்றும் கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட இடம் ஆகியவை புதிய விவரங்களில் அடங்கும்.
- பொருந்தக்கூடிய இடங்களில் வங்கிக் கணக்குகள், அலைபேசி எண், ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகிய விவரங்களும் சேகரிக்கப்படும்.
- பனி படர்ந்த பகுதிகளில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களிலும், இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கும்.

## தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா, 2026

- தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா, 2026-ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் தகுதி, நியமனம் மற்றும் பணி நிபந்தனைகள், அத்துடன் தீர்ப்பாயங்களின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளில் செயல்திறனை மேம்படுத்துதல், சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் சீரான தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றை இம்சோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், இச்சட்டம் 'தேசிய தீர்ப்பாயங்கள் ஆணையத்தை' (NTC) அமைப்பதையும் முன்மொழிகிறது.
- இந்த ஆணையம் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்: இதில் இரண்டு நீதித்துறை சார்ந்த உறுப்பினர்களும், இரண்டு தொழில்நுட்பத் துறை சார்ந்த உறுப்பினர்களும் இடம்பெறுவர்.
- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அல்லது உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஒருவர் இதன் தலைவராக இருப்பார்.
- புது தில்லியைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த ஆணையம் (NTC), தீர்ப்பாயங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கான தேர்வு நடைமுறைகளை நடத்துதல், செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தகவல்களுக்கான புதிய டிஜிட்டல் களஞ்சியத்தை நிர்வகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒரு சுதந்திரமான அமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தீர்ப்பாயங்களின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் சீரான தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் கொண்டுவருவதை இத்தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய கட்டமைப்பின் கீழ், ஒவ்வொரு தீர்ப்பாயத்திற்கும் 'தேடல் மற்றும் தேர்வுக்கான குழுக்களை' (Search-cum-Selection Committees) இந்த ஆணையம் அமைக்கும்.
- இக்குழுக்களில் ஆணையத்தின் உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மூத்த அரசுச் செயலாளர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.
- வேட்பாளர்களின் தகுதியை மதிப்பிடுவதில் இக்குழுக்களுக்கு உதவ, தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை அமைப்பது இதன் ஒரு சிறப்பம்சமாகும்.
- முக்கியமாக, தீர்ப்பாயங்களில் தற்போது நிலவும் நீண்டகால காலிப்பணியிடப் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில், பரிந்துரைகளைப் பெற்ற மூன்று

மாதங்களுக்குள் மத்திய அரசு அவற்றின் மீது நடவடிக்கை எடுத்து நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று இம் மசோதா கட்டாயமாக்குகிறது.

- நிலைத்தன்மை மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக, பல்வேறு தீர்ப்பாயங்களுக்கான பணி நிபந்தனைகளை இம் மசோதா சீராக்குகிறது.
- தீர்ப்பாயத் தலைவர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயது பூர்த்தியாகும் வரை பதவியில் இருப்பார்கள் என்று இது முன்மொழிகிறது.
- அதேபோல, உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது 67 வயது பூர்த்தியாகும் வரை பதவியில் இருப்பார்கள்.
- பொறுப்புக் கூறலும் இதில் முக்கியக் கவனம் செலுத்தப்படும் ஒரு அம்சமாகும்.
- தீர்ப்பாயத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிரான புகார்கள் மீதான விசாரணைகளை 'தேசிய தீர்ப்பாய ஆணையம்' (NTC) மேற்பார்வையிடும்.
- திவால் நிலை அல்லது ஒழுக்கக்கேடான நடத்தை போன்ற குறிப்பிட்ட குற்றங்களுக்காக அவர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தாலும், முறையற்ற நடத்தை அல்லது இயலாமை ஆகிய காரணங்களுக்காகப் பதவி நீக்கம் செய்வதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழுவின் முறையான விசாரணை தேவைப்படுகிறது.
- தரவு இடைவெளியைக் குறைக்கும் வகையில், 'தேசிய தீர்ப்பாயத் தரவு வலைப்பின்னல்' (National Tribunals Data Grid) ஒன்றை உருவாக்க இம் மசோதா முன்மொழிகிறது.
- வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் போன்ற இம் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பாயங்கள் தொடர்பான அனைத்து வழக்கு விவரங்களையும் கொண்ட ஒரு விரிவான களஞ்சியமாக இந்தப் இணையதளம் (portal) செயல்படும்.

***பின்னணி***

- 2026 ஆம் ஆண்டின் இந்த மசோதா, உச்ச நீதிமன்றத்தின் 2021 ஆம் ஆண்டு வழிகாட்டுதலுக்கு ஒரு சட்டரீதியான பதிலாகும். இது தீர்ப்பாய சீர்திருத்தச் சட்டம், 2021-க்கு மாற்றாகக் கொண்டு வரப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் 16 தீர்ப்பாயங்களின் "செயல்திறனின்மை மற்றும் சுதந்திரமின்மை"யை உச்ச நீதிமன்றம் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தது.
- அதே தீர்ப்பில், குறுகிய பதவிக்காலங்கள், கட்டுப்படுத்தப்பட்ட வயது வரம்புகள் மற்றும் நியமனங்கள் மீதான கடுமையான நிர்வாகக் கட்டுப்பாடு ஆகியவை நீதித்துறை சுதந்திரத்தையும் அதிகாரப் பிரிவினையையும் மீறுவதாகக் கூறி, தீர்ப்பாய சீர்திருத்தங்கள் (முறைப்படுத்தல் மற்றும் சேவை நிபந்தனைகள்) அவசரச் சட்டம், 2021-இன் முக்கிய விதிகளை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- தீர்ப்பாய சீர்திருத்த மசோதா, இந்தியாவில் உள்ள நீதித்துறை சார்ந்த அமைப்புகளின் செயல்பாட்டை மறுவடிவமைக்கக்கூடும்.
- "தீர்ப்பாயங்களை நிர்வாகத் தலையீட்டிலிருந்து பாதுகாப்பதே" அரசின் நோக்கம், இதுவே மெட்ராஸ் பார் அசோசியேஷன் தீர்ப்பில் உச்ச நீதிமன்றத்தின் சட்டரீதியான வாதமாக இருந்தது.
- எல். சந்திர குமார் எதிர் இந்திய ஒன்றிய (1997) வழக்கில் வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பில்கூட, தீர்ப்பாயங்களை நிர்வாகத் தலையீட்டிலிருந்து பாதுகாக்க ஒரு ஒற்றை, சுதந்திரமான ஒருங்கிணைப்பு அமைப்பின் தேவையை உச்ச நீதிமன்றம் கருத்தியல் ரீதியாக வரையறுத்தது.
- இங்கு, உயர் நீதிமன்றங்களுக்கு (சரத்து 226/227-இன் கீழ்) மற்றும் உச்ச

நீதிமன்றத்திற்கு (சரத்து 32-இன் கீழ்) வழங்கப்பட்டுள்ள நீதித்துறை மறுஆய்வு அதிகாரம், இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- தீர்ப்பாயங்களின் நோக்கம் நீதிமன்றங்களுக்குப் பதிலாக அமைவதல்ல, மாறாக நவீன ஆட்சியில் துணை நிறுவனங்களாகச் செயல்படுவதே ஆகும்.
- விரைவான மற்றும் திறமையான நீதி வழங்கலை உறுதி செய்யும் நோக்கத்துடன், வரி விதிப்பு, நிறுவனச் சட்டம், சுற்றுச்சூழல், பங்குச் சந்தை, அறிவுசார் சொத்துரிமை மற்றும் பிற ஒழுங்குமுறைத் துறைகள் போன்ற சிறப்பு விஷயங்களை அவை கையாளுகின்றன.




## புதிய 11 சர்வதேச துறைமுகங்கள்

- இந்திய அரசின் கீழ் உள்ள மத்திய உள்துறை அமைச்சகம் மேலும் 11 சர்வதேச துறைமுகங்களை அறிவித்துள்ளது.
- இதில் 9 தரைவழித் துறைமுகங்களும் 2 விமான நிலையங்களும் அடங்கும்.
- புதிதாக சேர்க்கப்பட்ட தரைவழித் துறைமுகங்கள் தர்ரங்கா, கெடே, கோஜடங்கா, ஹரிதாஸ்பூர், ஜெய்கான், டாவ்கி, மோரே மற்றும் அட்டாரி (சாலை) ஆகும், இவற்றுடன் போபால் மற்றும் திருப்பதியில் உள்ள விமான நிலையங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது மின்னணு விசாவின் நன்மையையும் பயன்பாட்டையும் மேலும் மேம்படுத்தும்.
- இந்தியா ஏறக்குறைய 95% மின்னணு விசா விண்ணப்பங்களை 72 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் வழங்குகிறது.
- மின்னணு விசா வைத்திருக்கும் வெளிநாட்டினர் நுழைவதற்கான சர்வதேச துறைமுகங்களின் மொத்த எண்ணிக்கை இப்போது 88 ஆக உயர்ந்துள்ளது.
- இந்திய விசா நடைமுறையை, குறிப்பாக சுற்றுலா விசா நடைமுறையை தாராளமய மாக்கவும் எளிமையாக்கவும் எடுக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை, மின்னணு விசா வசதியை அறிமுகப்படுத்தியதாகும்.
- மின்னணு பயண அங்கீகாரத்துடன் (ETA) கூடிய மின்னணு விசா வசதி, 43 நாடுகளின் குடிமக்களுக்காக 2014-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த வசதி தற்போது 172 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்குக் கிடைக்கிறது.
- இந்தியா இப்போது சுமார் 78 சதவிகித விசாக்களை மின்னணு விசாக்களாக வழங்குகிறது.

- மலையேற்றம் மற்றும் கப்பல் பயணங்களுக்கான குழு விசாக்கள் உட்பட, 17 துணைப் பிரிவுகளின் கீழ் மின்-விசா தற்போது கிடைக்கிறது.
- பாகிஸ்தான் கடவுச்சீட்டு வைத்திருக்கும் அல்லது பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த சர்வதேசப் பயணிகளுக்கு மின்-விசா வசதி இல்லாததால், அவர்கள் இந்தியத் தூதரகத்தில் வழக்கமான விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.





## இந்தியா முழுவதும் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் 2026

- இந்த ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி 6,805 மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் (EVCS) நிறுவப்பட்டுள்ள நிலையில், மின்சார வாகன (EV) மின்னேற்றும் உள் கட்டமைப்பில் கர்நாடகா இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
- இது கனரகத் தொழில்கள் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி தெரிய வந்து உள்ளது.
- கர்நாடகா, மகாராஷ்டிராவை விட சற்றே பின்தங்கியுள்ளது.
- தமிழ்நாட்டில் 3,839 மின்னேற்றும் நிலையங்களும், தெலங்கானாவில் 3,739 நிலையங்களும், கேரளாவில் 3,399 நிலையங்களும் உள்ள நிலையில் ஆந்திரப் பிரதேசத்தில் 1,976 நிலையங்களும், கோவாவில் 314 நிலையங்களும் உள்ளன.
- மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்களை அமைப்பது உரிமம் பெறாத ஒரு செயலாகும் என்பதோடு இது, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மின்சார அமைச்சகம் வெளியிட்ட வழிகாட்டுதல்களின்படி, தனியார் நிறுவனங்கள் மின்னேற்றும் நிலையங்களை நிறுவ அனுமதிக்கிறது.
- 2024-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பிரதம மந்திரி இ-டிரைவ் திட்டம் (PM E-DRIVE Scheme), கனரகத் தொழில்கள் அமைச்சகத்தின் (MHI) ஒரு முக்கிய முன்முயற்சியாகும்.
- பிரதம மந்திரி இ-டிரைவ் திட்டத்தின் கீழ், மத்திய அமைச்சகங்கள், மத்திய பொதுத் துறை நிறுவனங்கள், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் அவற்றின்

பொதுத்துறை நிறுவனங்கள் பொது மின்னேற்றும் நிலையங்களுக்கான முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கத் தகுதி பெற்றுள்ளன.

- அவர்கள் தாங்களாகவே வசதிகளை நிறுவி இயக்கலாம் அல்லது சார்ஜ் பாயிண்ட் ஆபரேட்டர்களை ஈடுபடுத்தலாம்.
- தேசிய மின்சார வாகனப் போக்குவரத்து இயக்கத் திட்டம் (NEMMP 2020), இந்தியாவில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டையும் உள்நாட்டு உற்பத்தியையும் விரைவு படுத்துவதற்கான ஒரு மூலோபாய வரைபடத்தை கோடிட்டுக் காட்டுகிறது.
- இது எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் தூய்மையான, நிலையான போக்குவரத்தை ஊக்குவித்தல் ஆகிய இரட்டை நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- NEMMP 2020 கட்டமைப்பின் கீழ், மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 2015-ஆம் ஆண்டில் FAME இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் வாங்குபவர்களுக்கு ஊக்கத்தொகைகளை வழங்கியது, சார்ஜிங் உள் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் உற்பத்திக்கும் ஆதரவளித்ததுடன் இதன் முதல் கட்டம் 2019 ஆம் ஆண்டு மார்ச் வரை தொடர்ந்தது, அதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டம் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது.
- இ-அம்ரித் கருவி ஒருவரின் இருப்பிடத்தின் அடிப்படையில் சார்ஜிங் நிலையத்தைக் கண்டறிய உதவுகிறது.




## நடமாடும் உணவுப் பரிசோதனை ஆய்வகங்களுக்கான இந்தியாவின் முதல் அங்கீகாரத் திட்டம்

- இது தேசிய பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான அங்கீகார வாரியத்தால் (NABL) தொடங்கப்பட்டது.
- இந்த முயற்சியானது, நம்பகமான, தர உறுதி செய்யப்பட்ட மற்றும் சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்ட உணவுப் பரிசோதனை சேவைகளை சமூகங்களுக்கு அருகிலேயே கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நம்பகமான, தர உறுதி செய்யப்பட்ட மற்றும் சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்ட பரிசோதனை சேவைகளை நடமாடும் உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள்

சமூகங்களுக்கு அருகிலேயே வழங்குவதற்கான ஒரு கட்டமைப்பை இது நிறுவுகிறது.

- இது உணவுப் பாதுகாப்பு கண்காணிப்பை வலுப்படுத்தும், தரப் பரிசோதனைக்கான அணுகலை மேம்படுத்தும், விரைவான ஒழுங்குமுறைத் தலையீடுகளை ஆதரிக்கும் மற்றும் நுகர்வோர் நம்பிக்கையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- NABL என்பது இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) கீழ் அமைக்கப் பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பான இந்தியத் தரக் கவுன்சிலின் (QCI) ஓர் அங்கத்துவ வாரியமாகும்.
- இது இந்தியாவில் உள்ள இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு (ஆய்வகங்களுக்கு) அங்கீகார சேவைகளை வழங்குகிறது.
- இந்தியாவில், NABL அங்கீகாரம் என்பது பொதுவாக பல்வேறு அரசு/ ஒழுங்குமுறை/ சட்டரீதியான அமைப்புகளின் அங்கீகாரங்களுக்கு முன்னோடியாக உள்ளது.





## உதர சக்தி பயிற்சி 26

- இந்திய விமானப்படை மற்றும் ராயல் மலேசிய விமானப்படை ஆகியவை மலேசியாவின் சுபாங் விமானப்படை தளத்தில் 'உதாரா சக்தி 2026' (Udara Shakti 2026) என்ற இருதரப்புப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.
- இந்தியாவின் ரஃபேல் (Rafale) போர் விமானங்கள் முதன்முறையாக இப்பயிற்சியில் பங்கேற்பது இதன் சிறப்பம்சமாகும்.
- மலேசியாவின் Su-30MKM ரக விமானங்களின் பயன்பாடு காரணமாக, இந்தியா மற்றும் மலேசியா இடையே கூடுதல் பாதுகாப்பு-தொழில்துறைத் தொடர்பு உள்ளது.
- விமானத்திலிருந்து ஏவக் கூடிய பிரம்மோஸ் (BrahMos) சூப்பர்சோனிக் ஏவுகணை மீதும் மலேசியா ஆர்வம் காட்டியுள்ளது.
- இந்தியா ஏற்கனவே தரைவழியாக ஏவப்படும் பிரம்மோஸ் அமைப்பை பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

***இப்பயிற்சி குறித்த விவரங்கள்:***

- ❖ இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பயிற்சியாகும்.
- ❖ இதன் அனைத்துப் பதிப்புகளும் மலேசியாவிலேயே நடத்தப்பட்டுள்ளன.




## 'மைத்ரி' பயிற்சி 2026




- ❖ 'மைத்ரி' பயிற்சியின் இந்த ஆண்டுப் பதிப்பிற்காக, இந்திய ராணுவம் ஒரு படை அணியை இந்த மாத இறுதியில் தாய்லாந்திற்கு அனுப்பவுள்ளது.
- ❖ 'மைத்ரி' என்பது இந்தியாவாலும் தாய்லாந்தாலும் மாறி மாறி நடத்தப்படும் ஒரு இரு தரப்புப் பயிற்சியாகும்.
- ❖ இதற்கு முந்தைய 14-வது பதிப்பு, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மேகாலயாவின் உம்ரோயில் உள்ள கூட்டுப் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.
- ❖ இந்த ஆண்டுப் பயிற்சி தாய்லாந்தில் நடைபெறவுள்ளது; இது மாறி மாறி நடத்தப்படும் இப்பயிற்சி முறையின் வெளிநாட்டுப் பயணப் பகுதியைக் குறிக்கிறது.

- தென்கிழக்கு ஆசிய நாடொன்றுடன் இந்தியா நீண்ட காலமாக நடத்தி வரும் ராணுவப் பயிற்சிகளில் 'மைத்ரி' பயிற்சியும் ஒன்றாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முதல் ISS விண்வெளி நடை - அனில் மேனன்




- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் அனில் மேனன், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) வெளியே தனது முதல் விண்வெளி நடையை நிறைவு செய்துள்ளார்.
- இது, சுற்றுப்பாதையில் அவரது முதல் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.
- மேனனும் நாசா விண்வெளி வீராங்கனை ஜெசிகா மெயரும், சுற்றுப்பாதை ஆய்வகத்திற்கு வெளியே 6 மணி நேரம் 27 நிமிடங்கள் செலவழித்த பிறகு, அமெரிக்க விண்வெளி நடை 96-ஐ நிறைவு செய்தனர்.
- எதிர்கால மேம்பாடுகளுக்காக நிலையத்தின் 3B மின்சார வழித்தடத்தைத் தயார் செய்வதே விண்வெளி வீரர்களின் முக்கியப் பணியாக இருந்தது.
- கூடுதல் சர்வதேச விண்வெளி நிலைய ரோல்-அவுட் சோலார் அரேக்களை (IROSA) நிறுவுவதற்கு இது வழி வகுக்கும் என்பதால் இந்தப் பணி முக்கியத்துவம் வாய்ந்தது.
- இந்த சோலார் அரேக்கள் (சூரிய ஆற்றல் தகடுத் தொகுப்புகள்), பழைமையான சுற்றுப்பாதை ஆய்வகத்திற்கு அதிக மின்சாரத்தை வழங்கி, அதன் அமைப்புகளுக்கு ஆற்றல் அளிக்கவும், இறுதியில் பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்பாதை இறக்கத்திற்கு ஆதரவளிக்கவும் உதவும்.
- விண்வெளி வீரர்கள் தங்களின் முதன்மை நோக்கங்களை நிறைவு செய்தனர், அதாவது விண்வெளி நடைக்காகத் திட்டமிடப்பட்ட முக்கியப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

- ஒரு விண்வெளி நடை என்பது அடிப்படையில் ஒரு விண்வெளி வீரரின் மிகவும் சவாலான பராமரிப்புப் பணியாகும்.
- விண்வெளி நடை என்பது, ஒரு விண்வெளி வீரர் அல்லது காஸ்மோனாட், விண்கலத்தை விட்டு வெளியேறி, விண்வெளிக்கு வெளியே செயல்படும் ஒரு செயலாகும்.
- இது EVA என்றும் அழைக்கப்படுகிறது, இதன் விரிவாக்கம் எக்ஸ்ட்ராவெஹிகுலர் ஆக்டிவிட்டி (extravehicular activity) ஆகும்.
- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) வெளியே, விண்வெளி வீரர்கள் விண்வெளியின் வெற்றிடத்தில் பணியாற்றுகிறார்கள்; அப்போது அவர்கள் ஆக்சிஜன், வெப்பநிலை கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக்காக முற்றிலும் தங்கள் விண்வெளி உடைகளையே சார்ந்திருக்கிறார்கள்.
- விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்கள் அல்லது விண்கலங்களை அவர்களால் பழுதுபார்க்க முடியும்.
- விண்வெளி நடைகளில் செல்வதன் மூலம், விண்வெளி வீரர்கள் பொருட்களைப் பழுதுபார்ப்பதற்காக பூமிக்குத் திரும்பக் கொண்டு வருவதற்குப் பதிலாக, அவற்றைத் தாங்களே சரி செய்ய முடியும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக நிலை நிறுத்துவதற்கான முக்கியத் துறைகள் - நிதி ஆயோக் அறிக்கை

- "இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக நிலைநிறுத்துவதற்கான முக்கியத் துறைகள்" (Key Sectors to Position India as a Global Manufacturing Hub) என்ற தலைப்பிலான அறிக்கையை நிதி ஆயோக் (NITI Aayog) வெளியிட்டுள்ளது.
- இது ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் தரவு சார்ந்த வரைபடமாகும்; உலகளாவிய உற்பத்தி சக்தியாக மாறுவதற்கான இந்தியாவின் லட்சியத்திற்கு வலுசேர்க்கக்கூடிய முக்கியத் துறைகளை இது அடையாளம் காட்டுகிறது.

### *நோக்கங்கள்*

- இந்த அறிக்கை வேதியியல், தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் உபகரணங்கள், ஜவுளி மற்றும் சூரிய மின்சக்தி (Solar PV) உற்பத்தி ஆகிய நான்கு துறைகளை விரிவாக ஆய்வு செய்துள்ளது.
- இவை இந்தியாவின் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கவும், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் (global value chains) நாட்டின் நிலையை வலுப்படுத்தவும் கூடிய அதிக திறன் கொண்ட நான்கு துறைகளாகும்.

### *ஜவுளித் துறை*

- இது நாட்டின் மிக முக்கியமான உற்பத்தித் துறைகளில் ஒன்றாகும்; இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 2 சதவீதத்தையும், உற்பத்தித் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) 11 சதவீதத்தையும், சரக்கு ஏற்றுமதியில் 9 சதவீதத்தையும் பங்களிக்கிறது.
- விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வேலைவாய்ப்பை வழங்கும் துறையாகவும் இது திகழ்கிறது; 4.5 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதோடு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) சார்ந்த பரவலான தொழில் வளர்ச்சிக்கும் இது துணைபுரிகிறது.
- 2025 ஆம் நிதியாண்டில், இந்தியா 37.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான

ஜவுளிப் பொருட்களை ஏற்றுமதி செய்தது. உலகளாவிய ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் 4.1 சதவீத பங்களிப்பை அளித்து, உலகின் ஆறாவது பெரிய ஜவுளி ஏற்றுமதியாளராக இந்தியா திகழ்கிறது.

***தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் உபகரணங்கள் துறை***

- 120 கோடிக்கும் அதிகமான சந்தாதாரர்கள், சுமார் 85 சதவீத தொலைத்தொடர்பு ஊடுருவல் மற்றும் கிட்டத்தட்ட 75 சதவீத இணையப் பயன்பாட்டுடன், இந்தியா தற்போது உலகின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு சந்தையாக உள்ளது.
- இத்துறையின் மாற்றத்தை உருவாக்கும் திறனை உணர்ந்து, தேசிய தொலைத் தொடர்பு கொள்கை 2025 (NTP-25) சில முக்கிய இலக்குகளை நிர்ணயித்துள்ளது: 2030-ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறையின் பங்களிப்பை இரட்டிப்பாக்குதல், தொலைத்தொடர்பு பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை இரட்டிப்பாக்குதல், பத்து லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் முதலீடு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) செலவினங்களை கணிசமாக அதிகரித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

***சூரிய மின்சக்தி (Solar PV) துறை***

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா 106 ஜிகாவாட் (GW) சூரிய மின்சக்தித் திறனை நிறுவியிருந்தது; 2030-ஆம் ஆண்டுக்குள் நிர்ணயிக்கப்பட்ட 280 ஜிகாவாட் இலக்கை அடைய மேலும் சுமார் 174 ஜிகாவாட் திறனைச் சேர்க்க வேண்டியுள்ளது.
- இதைத் தொடர்ந்து மேலும் எட்டு துறைகள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## தகைசால் தமிழர் விருது 2026

- 2026 ஆம் ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் (TNCC) முன்னாள் தலைவர் திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- இவர் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை வந்தவாசி மக்களவைத் தொகுதியையும், 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஆரணி மக்களவைத் தொகுதியையும் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.
- தமிழ்நாடு மற்றும் தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கிய சிறந்த நபர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது 2021 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

- இவ்விருது ரூபாய் 10 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழை உள்ளடக்கியது.
- என். சங்கரய்யா (2021), ஆர். நல்லகண்ணு (2022), கி. வீரமணி (2023), குமரி அனந்தன் (2024) மற்றும் கே. எம். காதர் மொய்தீன் (2025) ஆகியோர் இதற்கு முன் இவ்விருதினைப் பெற்றவர்களாவர்.




## சுமித் சர்க்கார் மறைவு




- நவீன கால இந்திய வரலாறு குறித்த தனது படைப்புகளுக்காக அறியப்பட்ட சிறந்த வரலாற்றாசிரியர் சுமித் சர்க்கார் தனது 87-வது வயதில் காலமானார்.
- அவர் 1974 முதல் 2004 ஆம் ஆண்டு வரை டெல்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார், மேலும் கல்கத்தா பல்கலைக்கழகம், பர்த்வான் பல்கலைக்கழகம் மற்றும் ஆக்ஸ்போர்டு ஆகியவற்றிலும் கற்பித்துள்ளார்.
- அவரது ‘மாடர்ன் இந்தியா’ (Modern India) என்ற புத்தகம் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் சாதாரண மக்களை இந்திய வரலாற்று ஆய்வுக்குள் கொண்டு வந்தது.
- அவரது ‘சுதேசி மூவ்மென்ட் இன் பெங்கால்’ (Swadeshi Movement in Bengal) என்ற புத்தகம் செய்தித்தாள்கள், நாடகங்கள், நாவல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்ற ஆதாரங்களைப் பயன்படுத்தி 1905 வங்கப் பிரிவினையை ஆராய்ந்தது.
- அவர் தேசியம், சாதி, மதம், உழைப்பு மற்றும் விளிம்புநிலை மக்களின் அனுபவங்களை வரலாற்றுச் சான்றுகள் மூலம் ஆய்வு செய்தார்.

- அவரது பிற படைப்புகளில் 'மாடர்ன் டைம்ஸ்' (Modern Times) மற்றும் 'காக்கி ஷார்ட்ஸ் அண்ட் சாஃப்ரான் ஃப்ளாக்ஸ்' (Khaki Shorts and Saffron Flags) ஆகியவை அடங்கும், அவை இந்திய சமூகம் மற்றும் அரசியலின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்தன.

## இந்தியாவின் முதல் பெண் போர் விமானப் படைத் தலைவர் - பாவனா காந்த்

- இந்திய விமானப்படையின் முதல் பெண் 'டாப் கன்' (Top Gun) விமானியாகி பாவனா காந்த் வரலாறு படைத்துள்ளார்.
- அவனி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகியோருடன் இணைந்து, நாட்டின் முதல் பெண் போர் விமானிகள் குழுவின் ஒரு பகுதியாக 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இவர் இந்திய விமானப்படையில் பணியில் சேர்ந்தார்.
- 2019-ஆம் ஆண்டில், பகல் நேரப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண் விமானி ஆனார்.
- 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முதல் பெண் போர் விமானி இவராவார்; பின்னர் 2024-ஆம் ஆண்டு குடியரசு தின விமான சாகச நிகழ்ச்சியிலும் (fly-past) இவர் பங்கேற்றார்.
- குவாலியரில் உள்ள 'தந்திரோபாய மற்றும் வான்வழிப் போர் மேம்பாட்டு நிறுவனம்' (TACDE)-இல், மதிப்புமிக்க 'போர் விமானப் படைத் தலைவர்' (FCL) பயிற்சியை வெற்றிகரமாக முடித்த முதல் பெண் போர் விமானி இவராவார்.
- இந்தப் பயிற்சி, அமெரிக்கக் கடற்படையின் "டாப் கன்" (Top Gun) பயிற்சிக்கு இணையானதாகக் கருதப்படுகிறது; இது அதிகாரப்பூர்வமாக 'ஸ்டிரைக் ஃபைட்டர் டாக்டிக்ஸ் இன்ஸ்ட்ரக்டர்' (Strike Fighter Tactics Instructor) திட்டம் என்று அழைக்கப் படுகிறது.




# இதரச் செய்திகள்

## பாதுகாக்கப்பட்ட பட்டியலிலிருந்து 18 நினைவுச் சின்னங்கள் நீக்கம்

- 1958 ஆம் ஆண்டின் பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் எஞ்சியவைகள் (AMASR) சட்டத்தின் கீழ், 18 நினைவுச்


சின்னங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதனை நிறுத்தியதை அடுத்து, 2021 ஆம் ஆண்டு முதல் மத்தியப் பாதுகாக்கப்பட்ட பட்டியலிலிருந்து அந்த 18 நினைவுச் சின்னங்களை மத்திய அரசு நீக்கியுள்ளது.

❖ நிக்கல்சன் சிலை மற்றும் மேடை, பரா கம்பா கல்லறை, இன்ச்லா வாலி கும்டி (தில்லி); கோஸ் மினார் எண் 13, கோஸ் மினார் (அரியானா); பச்சௌன் கோட்டையில் உள்ள கல்வெட்டு (மத்தியப் பிரதேசம்); 12-ம் நூற்றாண்டு கோயில், கோட்டையில் உள்ள கல்வெட்டு (ராஜஸ்தான்); குடும்பரி பகுதி (உத்தரகாண்ட்) ஆகியவை அந்த 18 இடங்களில் அடங்கும்.

❖ உத்தரப் பிரதேசத்தில் உள்ள பழமையான ஆலமரம், மூடப்பட்ட கல்லறை, கன்னர் பர்கில்ஸ் கல்லறை, கௌகாட்டில் உள்ள கல்லறை, ஜஹ்ரைலா சாலையில் உள்ள கல்லறைகள், லக்னோ-பைசாபாத் சாலையில் உள்ள கல்லறைகள், அஹுகியில் உள்ள மூன்று சிறிய லிங்கக் கோயில்கள், தெலியா நாலா பௌத்த இடிபாடுகள் மற்றும் கருவூலக் கட்டிடத்தில் உள்ள பலகை ஆகியவை அந்த இடங்களில் அடங்கும்.

❖ இந்தியத் தொல்லியல் துறை (ASI) இப்போது 3,688 மத்தியப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களைப் பராமரிக்கிறது; AMASR சட்டத்தின் 35-வது பிரிவு, தேசிய முக்கியத்துவத்தை இழக்கும் நினைவுச் சின்னங்களைப் பட்டியலிலிருந்து நீக்க வழி வகை செய்கிறது.

❖ அமெரிக்காவிலிருந்து 589, ஆஸ்திரேலியாவிலிருந்து 51, இங்கிலாந்திலிருந்து 21 மற்றும் நெதர்லாந்திலிருந்து 1 உட்பட, 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வெளிநாடுகளிலிருந்து 662 வரலாற்றுத் தொல்பொருட்களை இந்தியா மீட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★